709

Regd. No. M. 1230. July 1916.

உ

திருவள்ளுவர்.

மாதந்தோறும் வெளிவரும்,
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR 22 MAY

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி க.] நள-ஞு ஆடி-மீ. [பகுதி ச.

உள்ளுறை. பக்கம்.

கல்வி	49
விவசாயிகளால் ஆளப்படும் டென்மார்க் தேசம்	51
அரபிய பழமொழிகள்	54
அப்பால் என்ன செய்வாய்!	56
வர்த்தமானக்குறிப்புகள்	57
பத்திராதிபரின் குறிப்புகள்	,,
பட்டமளித்தல்	58
யுக்திக்குறிப்புகள்	,,
காங்கேயர்	59

பத்திராதிபர்:—கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை
கோயமுத்தூர்.

வருஷசந்தா ரூ. 1 } வெளிநாட்டுக்கு ரூ. 2
தபாற்கூலி அணு 2 } தனி சஞ்சிகை அ. 2

இம்மானுவேல் பிரஸ், கோயமுத்தூர்.

நமது பத்திரிகையின் போஷகர்களும், கௌரவ அபிமானிகளும்.

ஸ்ரீமான் என். ஆர். மலையாண்டி செட்டியாரவர்கள்,
ஜில்லாபோர்டு மெம்பரும், மிராசுதாரரும்,
உடுமலைப்பேட்டை

ஸ்ரீமான் எஸ். ஏ. கந்தசாமி பிள்ளையவர்கள்,
பிரபல கண்டிராக்டர்,
மேட்டுப்பாளையம்.

ஸ்ரீமான் பி. ஆர் ராமசாமி கவுண்டரவர்கள்,
மிராசுதார் பொன்னுண்டம்பாளையம்.
சோமனூர் போஸ்டு.

ஸ்ரீமான் வி. எஸ். ராமசாமி அய்யரவர்கள்,
ஜில்லாபோர்டு மெம்பரும், வக்கீலும்,
உடுமலைப்பேட்டை.

ஸ்ரீமான் எம். மீனாட்சி சுந்திரம்பிள்ளையவர்கள்,
ஹைக்கோர்ட்டு வக்கீல்
உடுமலைப்பேட்டை.

ஸ்ரீமான் எம். கல்யாணசுந்தர கவுண்டரவர்கள்,
மிராசுதார், செட்டிபாளையம்.

ஸ்ரீமான் கே. முருகனாதசெட்டியாரவர்கள்,
தாலூக்காபோர்டு மெம்பரும், மிராசுதாரரும்,
அனுப்பபாளையம்.

உ

கடவுள் துணை.

திருவள்ளுவர்.

தொகுதி க.] நள-௵ ஆடி-மீ [பகுதி ச.

கல்வி.

கல்வியினூங்கில்லை, சிற்றுயிர்க்குற்றதுணை, என்று ஆன்றோர் உரைத்ததுபோல கல்வி மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவருக்கும் உயிர்த்துணையாயிருப்பது. அதுவே மனிதற்கும் மிருகங்களுக்கு முள்ள வித்தியாஸத்தை விளக்குவது. இயற்கையறிவு செயற்கையறிவு என்னும் இரண்டு விதமான அறிவில் மனிதற்கும் மிருகங்களுக்கும் இயற்கையறிவைக்கடவுள் கொடுத்திருக்கிறார். மனிதன் கல்வியைக்கற்று தான் செயற்கை யறிவை ஸம்பாதிக்க வேண்டும். மிருகங்களோ செயற்கையறிவை ஸம்பாதிக்க முடியாது. இதுவே மனிதனுக்கும் மிருகத்திற்குமுள்ள விசேஷ வித்தியாசம். ஆகையால் கல்வியில்லாதவனுக்குச்செயற்கையறிவு உண்டாகாது. ஆகவே அவன் மிருகத்திற்கு சமானமாகிறான். ஆகையால் ஒவ்வொருவரும் கல்வி பயிலவேண்டியதவசியம்.

கல்விப்பொருள் செல்வப்பொருள் என்பதில் செல்வப்பொருளே மேன்மை. ஏனென்றால் கல்விப்பொருள்செல்வப்பொருள்போல வெள்ளங்கொண்டு போகாததாயும், நெருப்பில் வேகாததாயும், கள்வர்களால் அபகரிக்க முடியாததாயும், பிறருக்கு எவ்வளவு கொடுத்தாலும் குறையாததாகவும், அஞ்ஞானமாகிய இருட்டைப் போக்குவதாயுமிருப்பதால் கல்விப்பொருளே மேன்மை.

“இளமையிற்கல்” என்று ஒளவையார் அருளிச்செய்தபடி ஒருவன் கல்வியை இளமையிலேயே கற்கவேண்டும். இளமையிலன்றி வயதாய்விட்ட பிறகு கல்வி ஏறாது. சிறுவயதில் உள்ள மனதுதான் கிரஹித்ததை வெகுகாலம் வைத்திருக்கக்கூடியது.

199041

மேலும் "முதலில் கோணல் முற்றிலுங்கோணல்" என்றபடி இளமையில் ஒருவன் கல்வி கற்காமல்போனுல் அவன் தன் வாழ்நாள் முழுதும் மூடனுயிருப்பான். ஆகையால் இளமையிலேயே கல்வி கற்கவேண்டியது அவசியம்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக"

என்னுங்குறளில் ஒருவன் கற்கவேண்டும் நூல்களை, பழுதறக் கற்கவேண்டுமென்றும், அப்படிக்கற்றபின் தான் கற்ற கல்விக்குத் தகுதியாக அந்நூல்களால் சொல்லப்பட்ட வழியில் நிற்கவேண்டுமென்றும் திருவள்ளுவ நாயனுர் அருளிச்செய்திருக்கிறுர். ஒருவன் தன் வாழ்நாள்களை வீணுய்க்கழிக்காமல் கல்வியை உயிர்போலெண்ணி நல்லாசிரியரைத்தேடி அவர் குறிப்பறிந்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்து அவர் சொன்னவைகளை எப்படி மிகுந்த தாகமாயிருக்குமொருவன் ஆவலோடு தண்ணீரைக்குடிப்பானே அப்படி ஆவலோடு கேட்டு அவர் சொல்வதின் சாராம்சங்களையறியவேண்டும். இன்னும் மேலோர்கள் செய்த நூலை நன்கு ஆராயவேண்டும். இப்படிச்செய்கிறவன் நாளடைவில் பண்டிதனுவான். அரசர்க்குத் தன்றேயமல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்சென்றவிடமெல்லாம் சிறப்பு என்றபடி பண்டிதனே அரசனிலும் மேலாவான். அவனை ஜனங்கள் மரியாதை பண்ணுகிறுர்கள். அவனே தானங்களிலெல்லாவற்றிலும் உத்தமமான வித்யாதானத்தைச் செய்யப் பாத்திரனுகிறுன். அவனுக்குக் கல்வியிருத்தலால் செல்வம் தானே வந்தடையும். ஆகையால் அவன் இவ்வுலகத்தில் தன் வாழ்நாட்களை இன்பமாய் கழிக்கிறுன். இவன் தன் தேசத்திற்கும் ஜனங்களுக்கும் நன்மை செய்வதே தன் வேலையாய் நினைத்து அப்படியே அநேகரால் பலகாலம் கொண்டாடப்படும்படியான அநேக நன்மைகளைத்தன் வாழ்நாளில் செய்கிறதினுல் அவன் இறந்த பிறகும் கீர்த்தி நீடூழிவாழ்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஆகவே பல இடங்களில் இன்னும் வித்யாசாலைகளை ஏற்படுத்திக்கல்வியை மிகவும் விருத்தி செய்துகொண்டேபோனுல் நம் இந்தியா சில வருஷங்களில் அதி உன்னத பதவியை அடையும் என்பது நிச்சயம்.

விவசாயிகளால் ஆளப்படும் டென்மார்க் தேசம்.

ஐரோப்பாவில் டென்மார்க் என்ற ஒரு சிறு தேசம் இருக்கிறது. அதனுடைய விஸ்தீரணம் 15,300 சதுரமைல் அதில் வசிக்கும் ஜனங்கள் 25-லட்சத்துக்கு மேலில்லை; அதாவது நமது திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள ஜனத்தொகைக்கும் குறைவு. அத்தேசத்தில் விவசாயத்தைத்தவிர வேறு தொழில்களில்லை. இங்கிலாந்து, ஜெர்மனி தேசஙகளில் பெரிய பட்டணங்களில் கோடிக்கணக்கான பெரும் முதல்கள் வைத்துக்கைத்தொழில்கள் செய்யப்படுவதுபோல் செய்யப்படுவதில்லை. ராஜாங்கத்துக்குத் தலைவரான அரசனொருவனிருந்தாலும் அது பார்லிமெண்டு மூலமாய் ஜனங்களாலேயே நடத்தப்படுகின்றது. ஜன நாயகமென்பதை அங்குதான் பார்க்கலாம். பொதுவாய் விவசாயம் முக்கிய தொழிலாயிருக்கும் தேசங்களில் ஜனங்கள் ஏழைகளாயிருப்பார்களென்று சொல்லப்பட்டாலும் டென்மார்க் ஜனங்கள் ஏழைகளல்ல. விவசாயம் செய்துவரும் வரும்படியல்லாமல் ஜனங்கள் தங்களிருப்பிடத்திலேயேயிருந்து செய்யக்கூடிய பல சில்லரைத்தொழில்கள் செய்து கிடைக்கக்கூடிய வரும்படிகளும்பெற்று திருப்தியாயும் சுகமாயும் ஜீவிக்கிறார்கள். உலகத்தில் முக்கிய வல்லரசுகள் என்று பெயர் பெற்றுப் பெரும்படைகளாலும், குவிந்த செல்வங்களாலும், தூரமான அந்நிய தேசங்களோடு செய்யப்படும் வியாபாரங்களாலும், மனிதவர்க்கத்தின் கதியையே மாற்றிவரும் மற்றதேசங்களைவிட இந்த டென்மார்க்கே குறைவின்றிச் சந்தோஷமாய் வாழும் தேசமாகக் கருதப்படுகிறது.

இதற்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. டென்மார்க் தேசத்து விவசாயிகள் தாங்களே நிலத்துக்குச் சொந்தக்காரர்கள். பெரிய மிராசுதார்களும், ஜமீந்தாரர்களும், சொந்தக்காரர்களாகி அவர்களின் கீழ்க்கூலிக்கோ அல்லது குடிவாரம் பெற்றோ ஜீவிக்கிறவர்களல்ல. அங்கு விவசாயம் செய்யப்படும் பூமியின் விஸ்தீரணம் 10-லக்ஷம் ஏகரா இந்த 10-லக்ஷம் ஏகரா விவசாயிகளில் தலைக்கு 40-ஏகராகொண்ட பண்ணைகளாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்தமான நிலம் 40-ஏகராவுக்கு மேலில்லை. இந்த நிலத்திலிருந்து எவ்வளவு வரும்படி பெறக்கூடுமோ அவ்வளவு வரும்படியைத்தங்கள் சாமர்த்தியத்தால்பெற்று மாடுகள் எதேஷ்டமாய் வளர்த்து வெண்ணெய்செய்து அந்நிய தேசங்களுக்கு விற்றும், மாடுபன்றி முதலிய மிருகங்களின் மாம்சங்களை விற்றும் ஏராள

மான லாபம்பெற்று ஜீவிக்கிறார்கள். இது டென்மார்க் தேசத்தின் வளப்பத்துக்கு முதற்காரணம்.

இரண்டாவது காரணம் ஜனங்களுக்குள்ளிருக்கும் ஒற்றுமை. விவசாயம் செய்வதும், விளைபொருள்களைச்செய்வதும் அவைகளை விற்பதும், எல்லாம் கூட்டுமுயற்சியினாலேயே செய்யப்படுகின்றன. சுமார் 1850 ஐக்கிய நாணயச்சங்கங்களிருந்து நிலம் வாங்க விரும்பும் விவசாயிகளுக்குக்கடன் கொடுத்து உதவுகின்றன. கவர்ன்மெண்டும் தங்கள் பொக்கிஷத்திலிருந்து கடன் கொடுக்கிறார்கள். எவனேனும் நிலம் வாங்கவிரும்புவானானால் அந்த நிலத்தினுடைய விலையில் 10-ல் 1-பாகம் அவன் கையிலிருந்தால் போதும், பாக்கி 9-பாகம் கவர்ன்மெண்டு பொக்கிஷத்திலிருந்தே கொடுக்கப்படுகிறது இதற்கு 100-க்கு 4-விகிதம் விவசாயிகள் வருஷாவருஷம் கொடுக்கவேண்டும். இந்த 4-ல் வட்டிக்கு 3-ம், முதலுக்கு 1 ம் ஆக உளவடையும். இப்படி வாங்கப்படும் நிலம் 12 எகராவுக்கும் 300-பவுனுக்கும் அதிகப்படக்கூடாது. மேற்கண்ட ஐக்கிய நாணயச்சங்கங்களாலும் கவர்ன்மெண்டின் உதவியினாலும் ஜனங்கள் விவசாயத்தைக்கைவிட்டுப் பட்டணங்களில் வந்து குவியாமலிருக்கிறார்கள். மேல்நாடுகளில் எதுவும் இந்த விஷயத்தில் டென்மார்க்கைப்போலில்லை. பட்டணங்களில் ஏராளமான ஜனங்கள் குவிந்து அநேக தீங்குகள் விளைவதுபோல் டென்மார்க்கில் விளைவதில்லை. விவசாயிகளே ராஜாங்கத்தை நடத்துவதால் விவசாயத்துக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் கவர்ன்மெண்டால் செய்யப்படுகின்றன. விவசாயிகள் உழைப்பதும் பட்டணவாசிகள் சுகிப்பதுமாய் இந்தியாவிலுங்கூட இருப்பதுபோல் டென்மார்க்கிலில்லை. அவர்கள் செய்யும் தொழிலால் கிடைக்கும் லாபமனைத்தும் அவர்களையேயடைகின்றது.

உதாரணமாக, அவர்கள் செய்யும் வெண்ணையையும், உண்டாக்கும் முட்டைகளையும் நடுவிலிருக்கும் வர்த்தகர்கள் வாங்கி லாபத்தைக்கொண்டு போவதாயில்லை. விவசாயிகளே எல்லா லாபத்தையுமடைகிறார்கள். சுமார் 25-வருஷத்துக்கு முன்னால் அவர்களுக்கு வெண்ணெய் செய்தல் முதலிய தொழில்கள் தெரியாமலிருந்தன. அயர்லாந்து தேசத்தில் இவைகள் செய்யப்படுகின்றனவென்றறிந்து அத்தேசத்துக்கு டென்மார்க் தேசத்தார் சிலர்போய் அவைகளைக்கற்றுக்கொண்டுவந்து, அது முதல் அயர்லாந்து தேசத்தாரைவிட அதிகமாயும் திறமையாயும் அவைகளைச் செய்துவருகிறார்கள். தற்காலம் அத்தேசத்தில் 1087-சங்கங்கள்

ஸ்தாபிக்கப்பட்டு வெண்ணெய் செய்து வருகின்றன. இச்சங்கங்களில் 1,58000 விவசாயிகள் மெம்பர்கள். சங்கங்களிலலாமல் தனியாய் வெண்ணெய் செய்கிறவர்கள் வேறு 200-பேர் இருக்கிறார்கள். இவர்களனைவரும் சேர்ந்து இங்கிலாந்துக்கு அனுப்பும் வெண்ணெய் பிரதிவாரமும் 2,00000 பவுன் அல்லது 30,00,000 ரூபாய் மதிப்புள்ளது.

இவ்வாறே முட்டைகளுண்டாக்குவதிலும் அங்கங்கே சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்தச்சங்கங்களுக்கு மேலாகப்பெரிய சங்கமொன்றிருந்து அந்தச்சங்கம் சிறிய சங்கங்களனுப்பும் முட்டைகளை அந்நிய தேசங்களுக்கு அனுப்புகின்றன. அந்தந்த வீடுகளில் உண்டாக்கப்படும் முட்டைகள் வெகு சாக்கிரதையாய்க்காப்பாற்றப்பட்டு அங்கங்குள்ள சிறிய சங்கங்களுக்கனுப்பப்பட்டு அங்கிருந்து பெரிய சங்கத்துக்கு அனுப்பப்படும். இந்தப்பெரிய சங்கத்தில் 57,000 மெம்பர்களிருக்கிறார்கள். எந்த சங்கத்திலும் விவசாயிகளைத்தவிர வேறு மேம்பர்களில்லை. டென்மார்க் தேசத்து முட்டைகளென்றால் லண்டன் பட்டணத்தில் என்ன விலையேனும்கொடுத்து வாங்கப்படுமாம். இப்படி ஏற்றுமதி செய்யப்படும் முட்டைகளின் மதிப்பு வாரம் ஒன்றுக்கு சுமார் 1,320,000 பவுன் அல்லது 2 கோடி ரூபாய் எனச்சொல்லப்படுகிறது. இந்த சங்கங்களுக்குப்பணம் வேண்டுமானால் சேவிங்ஸ் பாங்குகளிலிருந்து கடன் வாங்கப்படுகின்றது. இந்த சேவிங்ஸ் பாங்குகள் 536-ல் போடப்பட்டிருக்கும் பணம் மொத்தம் 41,700000 பவுன். இந்தப்பணம் 1352,000 பேர்களால் போடப்பட்டிருக்கிறது. அதாவது தலைக்கு 31 பவுன் விகிதமாகிறது. விவசாயிகள் அவர்களுக்கு மிகும் பணத்தை இந்தப்பாங்குகளிலேயே போடுகிறார்கள் கடன் வேண்டுமானால் இவைகளிலேயே வாங்குகிறார்கள்.

இந்த அதிசயமான ஜனங்களுடைய ஐக்கிய சக்தி இத்துடன் நிற்கவில்லை. விவசாயத்துக்குவேண்டிய கருவிகளையும் மாடு முதலிய மிருகங்களையும் வெளித்தேசங்களிலிருந்து மொத்தமாய் வாங்கிச்சில்லறையாய் விற்கச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பெரிய சங்கமொன்றும் அவ்விடங்களில் சிறிய சங்கங்கள் பலவும் ஒவ்வொரு சங்கமுமாகப்பெரிய சங்கம் வாங்கும் சாமான்கள் கிராமத்துக்கு எட்டுகின்றன. இதில் தரகிரிகளாவது சில்லரை வியாபாரிகளாவது லாபத்தைக்கொண்டுபோவதில்லை. வாங்கின விலைக்கே விவசாயிகளுக்கு விற்கப்படுகின்றன. இப்படி

வாங்கப்பட்ட சாமான்களின் மதிப்பு 1907-வருஷத்தில் 25-லக்ஷம் பவுன் கொண்டது.

இவ்வளவும் செய்யும் ஜனங்கள் 25-லக்ஷத்துக்குமேலில்லை. இவர்களே விவசாயம் செய்து இவர்களே ராஜாங்கத்தை நடத்துகிறவர்கள் லக்ஷபதிகளாயும் கோடீஸ்வரராயுமிருந்து விவசாயிகளைச்சிறுமைப்படுத்துவோரில்லை. செல்வத்தை உண்டாக்குவோரும செல்வத்தை அனுபவிப்போரும் விவசாயிகளே. இவர்களுக்குச்செல்வத்தில் பேராசையுமில்லை. அயலார் சொத்தை அடிபிடியாய்ப்பிடுங்கிக் கட்டிக்கொண்டு பெரிய மிராசுதாரர்களாக வேண்டுமென்ற ஆசையில்லை. ஜமீந்தார்களும இவர்களிலில்லை மிதமான சொத்துள்ளவர்களாய்த்தங்கள் சொத்தைக் காத்து விருத்தி செய்வதில் சகல சக்திகளையும் பிரயோகித்து மிதமான சுகங்களில் திருப்திகொண்டு குறையின்றி வாழ்கிறார்கள். ராஜாங்கமும் ஜனங்களும் ஒன்று என்பதை இந்த டென்மார்க்கிலேயே காணலாம்.

"சு. மி."

அரபிய பழமொழிகள்.

1. சுதேசத்தில் ஞானி; சுரங்கத்துள்ள சுவர்ணம்.

2. மதிகெட்ட மித்திரனிலும் மதியுள்ள சத்துரு வாசி.

3. செல்வத்திலும் சிறந்தது ஞானம். ஞானம் உன்னைக் காக்கும்; செல்வத்தையோ நீ காக்கவேண்டும். செலவினால் செல்வம் குறையும்; ஞானம் கூடும்.

4. ஜீவன் அக்கினிபோல் புகையாக ஆரம்பித்து, சாம்பலாக முடியும்.

5. இருவகை அறிவுண்டு. ஒன்று இயல்பாய் வருகிறது; மற்றொன்று கல்வியினால் கிடைக்கிறது. முந்தினது இல்லாவிட்டால் பிந்தினது வியர்த்தம். கண்கள் ஒளியற்றவனுக்கு சூரிய ஒளி என்னபலன்?

6. "மலையானது நிலை பெயர்ந்தது" என்று சொன்னால் நம்பிக்கொள். "மனிதன் குணம் மாறினான்" என்று சொன்னால் நம்பாதே.

7. சந்திரன் இருக்கத்தாரகை வெளிச்சைத்தேடுவான் ஏன்?

8. காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு.

9. சோம்பலின் நற்கந்தத்தைவிட, சுறுசுறுப்பின் துர்க்கந்தமே நலம்.

10. நீ இருக்கிற ஸ்தலமே உனக்கு உலகம்.

11. நன்மை செய்வதிலேதான் நரர் பெறுமதி விளங்கும்.

12. அலுவலை நீ நோக்கு; ஆதாயத்தை தெய்வம் நோக்கும்.

13. கெலிப்பின் நாளில் இளைப்புத்தோன்றுது.

14. வாழ்விலே திருந்தாதவன் தாழ்விலும் திருந்தான்.

15. ஞானமில்லாத சிரமில்லை.

16. ஒன்றின் தலையைப்பிடிக்கக்கூடாவிட்டால் வாலைப்பிடி.

17. ஆதுலர்க்கு இறைத்தால் ஐசுவரியம் பெருகும்.

18. தீயனுன கல்விமான் தீபம்பிடித்த குருடனுக்குச்சரி அவன் மற்றவர்களுக்கு வெளிச்சம் காட்டியும், தனக்கோ பிரயோஜனமில்லை.

19. நரைமயிர்கள் மரணத்தின் முன்தூதன்.

20. கொஞ்சத்தில் ரம்மியம் குறையாத செல்வம்.

21. எந்தக்காரியமும் முன்பு வருத்தம் பின் இலேசு.

22. அறியாமை உலகத்திற்கு அநியாயம்.

23. நம்பிக்கை பெருகவே துன்பமும் பெருகும்.

24. மூன்று காரியங்களை மதிக்கவேண்டுமானல் அததற்கு மூன்று தருணங்களுண்டு. யுத்தத்தில் வீரியம், கோபத்தில் விவேகம், ஆபத்தில் சிநேகிதம்.

25. வெகுளியின் துவக்கம் பைத்தியம், முடிவு மனஸ்தாபம்.

26. இரவல் வாங்கிய போர்வை விறைப்புத்தாங்காது.

27. நிழல் தரும் விருட்சத்தைத்தறியாதே.

199041

m2118, N16TV
N16:1:4

அப்பால் என்ன செய்வாய்?

சுமார் மூந்நூறு வருஷங்களுக்குமுன் ஒரு பால்யன் தர்ம சாஸ்திரம் கற்கும்பொருட்டு ஐரோப்பாக்கண்டத்தில் புகழ்பெற்றதாயிருந்த சர்வ கலாசாலேக்குப்போனன். அவன் புத்தி தத்துவங்களில் சிறந்தவனும், மட்டற்ற மன ஆவலுள்ளவனும் இருந்தமையால். மேன்மேலும் வித்தையில் விர்த்தியடைந்துகொண்டு வந்தான். இப்படியிருக்கும்போது, ஒரு நாள் அவன் பிறர் உயிரைத்தன் உயிர்போல் எண்ணி அவர்களுக்காக ஓயாமல் உழைத்துவந்த புண்ணிய புருஷனுகிய ஒரு விருத்தாப்பியனைப் பார்க்கும்படி போனன். தான் கல்விச்சாலேயிற் படித்துவருவதையும், கல்வியில் அதி சீக்கிரம் தேறும்படி பெருமுயற்சி செய்வதையும் விருத்தாப்பியனுக்கு அந்தப்பால்யன் விரிவாய் எடுத்துரைத்தான். அதையெல்லாம் பொறுமையாய்க்கேட்டுக்கொண்டிருந்த அந்த புண்ணிய புருஷன் அவனைப்பார்த்து, நீ உன் கல்வி முயற்சிகளை முடித்த பின்பு என்ன செய்வாய்? என்க,

பால்யன். நான் கல்விக்குறிய பட்டத்தைப்பெற்றுக்கொள்வேன் என்றான்.

விருத்தாப்பியன். அப்பால் என்ன செய்வாய்?

பால்யன். நான் என் சாதுரியத்தினுலும், வித்தை வல்லபத்தினுலும், புத்திதத்துவத்தினுலும் ஜனங்கள் எல்லாருமம புகழத்தக்கதாகப் பெயரும் பிரதிஷ்டையும் அடைவேன்.

விருத்தாப்பியன். அப்பால் என்ன செய்வாய்?

பால்யன். நான் பெரிய உத்தியோகம்பெற்று, அநேக திரவியம் சம்பாதித்து. பார்க்கிறவர்களெல்லாரும் மகா இராஜன் என்று சொல்லத்தக்கதாகக்கீர்த்திப் பிரஸ்தாபம் அடைவேன்.

விருத்தாப்பியன். அப்பால் என்ன செய்வாய்?

பால்யன். தனமும். கனமும் உண்டானபின்பு, பெண்டீர் பிள்ளைகளுடன் உண்டு சுகித்து வாழ்ந்திருப்பேன்.

விருத்தாப்பியன். அப்பால் என்ன செய்வாய்?

பால்யன். இப்படியெல்லாம் வைபோகமாயிருந்து, சுகாநுபோகங்களுடன் காலத்தைக்கழித்தபின்பு கடைசியில் மரித்துப்போவேன் என்றான். அப்பால் என்ன செய்வாயென்று விருத்தாப்பியன் சற்று உரத்த சத்தமாய்க்கேட்க, பால்யன் ஒன்றும் பேசாமல், தலேகவிழ்ந்தவனுய்ப் போய்விட்டான். மரித்தபிற்பாடு என்ன செய்வாயென்று அந்த பக்திமான் கேட்டகேள்வி அம்புபோல் அவன் மனதில் தைத்ததால், அவன் உணர்வடைந்து தன் பெருமையான எண்ணங்களையெல்லாம் விட்டுவிட்டு கடவுளுக்கு மகிமையாயும், பிறருக்கு நன்மையாயும் தன் ஜீவகாலத்தைக் கழித்துவந்தான்.

வர்த்தமானக் குறிப்புகள்.

கோவைத்தமிழ் சங்கம்—இச்சங்கத்தின் ஆதரவின்கீழ் கோயமுத்தூர் இந்து கலாசாலையில் ஜூலை மீ 29 தேதியன்று மாலை பாலக்காடு ஸ்ரீமான் ராய்பகதூர் பி. ஐ. சின்னசாமிபிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் "தேசபாஷையும் சமூக முன்னேற்றமும்" என்பதைப்பற்றி ஸ்ரீமான் என். எஸ். ராமசாமி ஐயங்காரால் தெளிவாயும் இனிமையாயும் பிரசங்கிக்கப்பட்டது.

இந்து ஐக்கிய வாசகாசாலை—இதன் ஆரம்ப மகோற்சவம் சென்ற மாதம் கோயமுத்தூர் ராஜவீதியில் இதற்காக ஏற்பட்ட கட்டடத்தில் ஸ்ரீமான் சி. எஸ். டி. வேங்கட்டரமண ஐயரின் அக்கிராசனத்தின்கீழ் கொண்டாடப்பட்டது. அச்சமயம் "திருவள்ளுவர்" பத்திராதிபராகிய ஸ்ரீமான் கே. எஸ். சுப்பிரமணியபிள்ளையால் "கல்வி" "பத்திரிகையின் நலம்" என்ற விஷயங்களைப்பற்றி உபன்யாசம் செய்யப்பட்டது.

காமாக்ஷி விலாச வாசகாசாலை—சென்ற மாதத்தில் இப்பெயர் பூண்ட வாசகாசாலை ஒன்று ஸ்ரீமான் சி. கே. சுப்பிரமணிய முதலியாரால் திறந்துவைக்கப்பட்டது. கோயமுத்தூர் இந்து கலாசாலை பிரதம தமிழ்ப்பண்டிதராகிய ஸ்ரீமான் கந்தசாமிபிள்ளையவர்களால் "கல்வி" என்ற விஷயத்தைபபற்றி தெளிவான இனிய தமிழ் நடையில் விரிவாய் பிரசங்கிக்கப்பட்டது.

பத்திராதிபரின் குறிப்புகள்.

கனம் பி. வி. நரசிம்ம ஐயர்—பொதுஜன கல்வியபிவிருத்திக்காக மிகுதியும் உழைத்துவரும் ஸ்ரீமான் ஐயரவர்கள் மறுமுறையும் சட்டசபையின் பிரதிநிதி (மெம்பர்) யாக தெரிந்தெடுக்கப்பட்டதைப்பற்றி கேள்விப்பட அனைவரும் சந்தோஷப்படுவார்கள் நாமும் நமது மனப்பூர்வமான வந்தனத்தை ஐயரவர்களுக்கு தெரிவிக்கிறோம்.

நன்கொடை வரவு—ஈரோடு தாலூக்கா ரெட்டிமார் சங்கத்தார் நமது பத்திரிகையினபிவிருத்தியைக்கருதி நன்கொடையாக அளித்த ரூபாய் ஐந்தையும் அன்புடனேற்று, அச்சங்கத்தார் பொது ஜனக்கல்வியபிவிருத்தியில் கொண்டிருக்கும் அக்கறையைப்பற்றி பெரிதும் பாராட்டுகிறோம்.

பட்டமளித்தல்.

சென்னை வேப்பேரியிலுள்ள செங்கல்வராய நாயகர் தொழிற்பள்ளிக்கூடத்தில் ஜூலை மீ 9 உ மாலை 6 மணிக்குமேல் சென்னை வன்னியகுல க்ஷத்திரிய மகாசங்கத்தார் சேலஞ ஜில்லா நஞ்சை இடையாறு யூனியன் சேர்மனும், நாமக்கல் தாலூக்கா போர்டு மெம்பருமாகிய ஸ்ரீமான் கந்தசாமிகண்டருக்கு "சம்புகுல சேகரர்" என்ற பட்டத்தை சன்னதுமூலம் அளிக்க பெருங்கூட்டம் கூடினர் ஸ்ரீமான் சொக்கலிங்க நாயகர் அக்கிராசனம் வகித்தார் அநேக கனவான்கள் விஜயம் செய்திருந்தனர். சன்னது அளிக்கப்பட்டபின், ஸ்ரீமான் கண்டருடைய குணங்களைக்கொண்டாடி அநேக கனவான்கள பேசினர். பிறகு சந்தனம் புஷ்பம், தாம்பூலம் முதலியன வழங்கப்பட்டு இரவு 8 மணிக்கு கூட்டம் கலைந்தது.

யுக்திக்குறிப்புகள்

"மதிராசு" என்னும் பெயருக்குப் பொருள் விசாரித்ததில், ஒருவர் அது "தாய்" என்று பொருள்படும் பதமொன்றிலிருந்து திரிந்துண்டாகியதாகச் சொல்லுகிறார். பின்னொருவர் அதை "மாற்றாந்தாய்" என்று பொருள்படுத்துகிறார் உஷ்ணம், சாக்கடைவைபவம், தெருப்புழுதி, முதலிய சில லக்ஷணங்களை நோக்குமிடத்து பின்சொல்லிய பெயரே அதற்குத்தகுமென அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஒரு தம்பிரானுக்கும் அவ்வூர் முன்சீபுக்கும் வெகுநாளாக விரோதம் முன்சீபு அவனை எப்படியாவது அவமானப்படுத்த வேண்டுமென்றிருந்தார் கடைசியில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கேசில் தம்பிரான் சாக்ஷியாக வந்தான் அவனுக்கு இரண்டு கண்ணும் குருடு, ஆதலால் ஒரு பையன் கோலை பொருதலைப்பில் பிடித்துக்கொண்டு வழிகாட்டி வரத்தம்பிரான் கோர்ட்டுக்குள் வந்தான் உடனே முன்சீபு ஏதோ ஒரு வியாஜியத்தைக்கொண்டு தன் கோர்ட்டு நடக்கவொட்டாமல் சந்தடி செய்வதாகப்புகார் உண்டாக்கிக்கொண்டு தம்பிரானை வாயில் வந்தபடி திட்டினார். சற்றுநேரம் கேட்டுவிட்டு தம்பிரான் வழிகாட்டிவந்த பயலைக்கூவி "அடே முட்டாள்பயலே, அந்தப்பயலே, இந்தப்பயலே நான் உன்னைக்கோர்ட்டுக்சல்லவா கூட்டிப்போகச்சொன்னேன் அந்தப்

படுபாவி பார்ப்பாரப்பயல் பொல்லாதவனாச்சுதே அவனுக்கு இரக்கமென்பது கிடையாதே சண்டாளன், வேளைக்குபோகாவிட்டால் பெரிய அமுல் நடத்திவிடுவானே, ஆதலால் சீக்கிரம், போவோம் வா, இங்கெங்கேயோ கடைத்தெருவில் குடிகார பயலகளிருக்குமிடத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு வேடிக்கை பார்க்கிறாய் உதைப்பேன்' சீக்கிரம் வா," என்றான் இதைக் கேட்டதும் முன்சீப் ஒருவர் தவிர மற்றெல்லோருக்கும் முகத்தில் மந்தஹாசம் கண்டது. முன்சீபுககுமட்டும் மேல் நடவடிக்கை யொன்றும் தோன்றாமல், முகம் வாடிற்றாம்.

—o—

உ

காங்கேயர்.

"தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து"

என, ஔவைப்பிராட்டியாரின் அமுதவாக்கால் வியந்தோதப்பட்ட தொண்டை நாட்டின் கண்ணுள்ள "சேங்கற்பேட்டை" (செங்கற்பட்டு) என்னுந்தலத்துத்தந்துவாயர், செங்குந்தர் என்று கூறப்படுகிற கைக்கோள்வர் மரபில் பிறந்தவரென்ப. இக்கைக்கோள்வர்மரபினர் கந்தபுராணம் கூறுகிற வீரவாகு முதலாம் ஒன்பதின்மர்வம்சத்தார் எனப்படுவர் இப்புலவர் இன்ன காலத்திற்றான் தமிழகம்புகழ வாழ்ந்திருந்தார் என்பதைத்திட்டமாய் வரையறுத்துக்கூறவும், இவர் ஜனனமாதிய விசேட வரலாறுகளொன்றும் நாம் அறிந்து மகிழ்தற்கும் ஏதுவில்லாமலிருக்கிறது. "பாவலர் சரித்திர தீபகத்தால்" இப்புலவர் இல்லறத்திச்சையற்றுத் துறவறமடைந்த ஞானியாரென்பதுணரப்படும் இப்பெருந்தகையார் ஏகாந்தத்தினின்மையுணர்ந்து தத்துவங்கடந்த வித்தகப்பொருளாம் தலைவனைக்காணும் பேரின்ப நாட்டங்கொண்டிருந்தாலும்; தமது கல்வி நலத்தைப் பொய்புலக வாழ்வினர்க்குப் புகட்ட மறந்தாரில்லை. இவரியற்றிய நூல்கள் பலவுண்டென்று கருதினாலும் அவையெல்லாம் கட்புலனுக்கு மறைந்து பிரசித்தியாய் நிற்பது "உரிச்சொல்நிகண்டு" ஒன்றேயாம். பதப்பொருள் அறிதற்கும், தமிழ்மொழியுணர்ச்சிக்கும், ஏற்ற கருவியாக நம்பூர்வீகர் கையாண்டுவந்த "திவாகரம், பிங்கலம், சூடாமணி, கயாகரம், அகராதி, ஆசிரியம்" என்றாதிய நிகண்டுவரிசைகள்போல் இவ்வுரிச்சொல் நிகண்டையும் கொண்டா

ரென்றறிதலோடு, வடமொழியிலுள்ள "அமரசிஹ்மம், அமரதத்தம், விசுவம், விஷாமிர்தம், சப்தார்ணவம், சரஸ்வதிவிலாஸம்," முதலாக வுள்ள நிகண்டுகளையும் கையாண்டுவந்திருப்பதாக அறியப்படுகின் றன. தற்காலம் நமக்குப்பாஷாஞான விற்பனத்திற்கு மிகுந்த உபயோகமாகிவருகின்ற தமிழ் அகராதிகள்போல், முற்காலத்தில் இந்நிகண்டுவரிசைகள் நம்முன்னோர்க்குப்பேருபகாரிகளாகயிருந்து வந்தன. நிகழ்காலத்திலோ தமிழறி நண்பர்களில் பெரும்பாலோர் நிகண்டுகளென்பதைக்கருதாமலும், கண்ணெடுத்துப்பாராமலும், பெயரேனுங்கேட்காமலும், புறக்கணித்து வருவதால், இந்நிக ண்டுவரிசைகள் காலாந்தரத்தில் முற்றிலும் மறைந்தொழிந்துவி டும்போலும். இதன் ஆசிரியர்கள் எத்தகைய அரும்பாடுபட்டுப்பல நூல்களை ஆராய்ச்சிசெய்து ஒழுங்குபடுத்திக்கோர்வையாக்கிப்பின் னோர்க்குப்பெருநிதியாகவைத்த இவ்வரிய நூல்கள் அவாந்தரத்தி ற்செல்வது பெரிதும் விசனிக்கத்தக்க விஷயம்.

திவாகரம், பிங்கலம், சூடாமணி ஆகிய மூன்று நிகண்டுகட்கும்' பிற்பட்டதே உரிச்சொல் நிகண்டெனக்கொள்ளவேண்டும். இவ்வு ரிச்சொல் நிகண்டு சூடாமணிக்கு முந்தியதென்பது தோண்டை மண்டல சதகமுடையார் கொள்கை.

"பண்டை நிகண்டு திவாகரம் பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசையின்சொல் வடமொழி செய்யுளெல் லாமுணர்ந்தே
தண்டமிழ் கொண்டுநிகண்டு சூளாமணி தானுரைத்த
மண்டல வன்குடி கொண்டது நீடொண்டை மண்டலமே"(62)

என்பதனாற் காண்க.

மண்டலவனிகண்டுக்கு "நிகண்டு சூளாமணி" என்பது பெய ரெனத்தெரிகின்றது

உரிச்சொல் நிகண்டு பிற்காலத்ததெனக்கொள்வதற்கு "ஆசி ரிய நிகண்டுடையார்" நமக்கு ஒருவழி காட்டியுள்ளார். அந்நிகண்டு பாயிரத்திலே,

"முந்துள திவாவரம் பிங்கல நிகண்டுசீர்
முந்து காங்கய னுரிச்சொல்
முறைபெறு கயாகரம் பகருமக ராதியிவை
முற்று மொன்றாத் திரட்டி."

என நிகண்டு வரிசைகள் கூறப்பட்ட அடிகள் வருகின்றன. இவ் வரிசைப்படியே சூடாமணி நிகண்டையடுத்து உரிச்சொல் நிகண் டைப் பிற்காலத்ததென்று கொள்வதற்குச்சிறந்த காரணமும் ஒன்

றுண்டு. வணங்கற்பொருளில் "சலாஞ்செய்தல்" என்னும் சொல் வழக்கம் நம்நாட்டில் வழங்கத்தொடங்கியது துருக்கராட்சிக்குப் பிந்திய காலத்தே என்பது யாவர்க்குந் தோன்றத்தக்கது. இச் சொல்வழக்கு பிங்கலந்தை, சூடாமணி, நிகண்டுகளில் காணக்கிடையாதாயினும், உரிச்சொல் நிகண்டில்,

"வந்தனை காணல் வணங்கல் பணிதலே
தந்தலை தாழ்தல் சலாஞ் செய்தல்" (9-வது செயல் பற்றிய பெயர்த்தொகுதி பா. 2)

எனவணங்கற்பொருளில் எடுத்தாளப்படுகிறது. இதனால் இந்நிகண்டுடையார்க்குப்பழமை கூறுதல் சிறிதும் பொருந்தாமை காண்க இதே சொல்வழக்கைத்துருக்கராட்சிக்காலத்து விளங்கிய "ஸ்ரீ குமரகுருபரமுநிவர்" தமது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில்

குறவர் மகட்குச் சலாமிடற் கேக்கறு
குமரனை முத்துக்குமாரனைப் போற்றுதும்"

என்னும் தொடரில் எடுத்தாண்டனர் ஆகவே, உரிச்சொல் நிகண்டும், அம்முனிவர் காலத்தையடுத்துச் சிறிது முன்னோ பின்னோ இயற்றப்பட்டிருத்தல்வேண்டுமென்று கருதலே பொருத்தமாகும். இனி மேற்கூறிய திவாகரம், பிங்கலம், சூடாமணி, உரிச்சொல் நிகண்டுகளின் ஆசிரியர் இன்னாரென்பதையும், இன்னகாலத்தவரென்பதையும் சுருங்கக்கூறுவது இங்கு பொருந்துமென்று கருதுகின்றோம்.

1, திவாகரம்—இந்நிகண்டின் ஆசிரியர் "திவாகரமுனிவர்" பாடக்கேட்டவன் "சேந்தன்" என்னும் சிற்றரசன் இவன் வேண்டுகோளின்படி பாடப்பட்டதால் சேந்தன் திவாகரம் என வழங்கத் தொடங்கிற்று. சேந்தன் என்னும் இவ்வரசன் ஔவையாரால்,

"கற்றநாவினன் கேட்ட செவியினன்
முற்றவுணர்ந்த மூதறிவாளன்
நாகரீக நாட்டத்தாரிய னருவந்தை."

எனப்புகழ்ந்து பாடப்பெற்றவன். இவனை, அம்பர்கிழான் அருவந்தை எனவும் கூறுப "அம்பர் என்னும் ஊர், சோழமண்டலத்தில் நன்னிலம் தாலூகா பூந்தோட்டம் ரயில்வேஸ்டேஷனுக்கு கிழக்கு 2 மைலிலுள்ளது. சோமாசிமாறநாயனார் தாம் செய்யும் சோமயாகத்தில் தியாகப்பெருமானே நேரில்வந்து அவிர்ப்பாகம் பெறவேண்டுமென்றும் எண்ணமுடையாராய் சுந்தரமூர்த்திசுவாமி

கட்குத் தூதுளம்பூ கீரை முதலியன கொடுத்து விரும்பியவாறே தியாகப்பெருமான் அவியேற்கப்பெற்ற திருத்தலம். இச்சேந்தன் ஆரியகுலத்தவனென்பதும் குணவிசேடங்களில் சிறந்தவனென்பதும் கல்வி கேள்வி மிக்கவனென்பதும், வடமொழி தென்மொழியில் செய்யுளியற்றுவதில் வல்லவனென்பதும், இரவலர்க்கும், புரவலர்க்கும் மகோபகாரியென்பதும், திவாகரத்தானுணரப்படுவன. அன்றியும், "சம்பாதி" என வழங்கப்படும் புகார் தெய்வத்திற்கு அந்தாதியும், ஸ்ரீ ராமபிரானது கோதண்டம், அருச்சுனன் காண்டீபம் முருகக்கடவுள் வேலாயுதம் இம்மூன்றுக்கும் புகழ்ச்சிப்பாடல்கள் கூறினவனென்பதும் இந்நிகண்டின் விலங்கின் பெயர்த்தொகுதி இறுதிக்கட்டுரைகள் கூறுகின்றன. "புறநானூற்றில்" 385-ம் பாடலாகிய "வெள்ளிதோன்றிய"; என்னும் பாடல் "கல்லாடர்" இச்சேந்தனைக்கூறியதென்பர். இக்காரணங்களால் இத்திவாகரம் சங்ககாலத்தே தோன்றிய பெருமையுடையதாம், வேறுவிதமாகச் சொல்லின் இன்றைக்கு 1800 வருஷங்கட்கு முந்தியது என்னலாம்

2. பிங்கலம்—இந்நிகண்டின் ஆசியர் திவாகரர் புத்திரர் "பிங்கலமுனிவ" ரென்ப. இது இந்நிகண்டின் பாயிரத்தாற்கண்டது. இந்நிகண்டில் கூறப்படும் சிலவழக்குகளைக்காணும்போது திவாகரத்திற்கு மிகவும் பிந்தியதாகவே கொள்ளலாம். உதாரணமாக "பல்லவர்" என்னும் பெயர் இழிஞர்க்கு இதிற் கூறப்பட்டிருக்கிறது. இதனால் பலவகையினும் சிறப்புற்றோங்கிக் கீர்த்தி நிறுவிய பல்லவ அரசர் தம் நிலைகுலைந்து சிறப்பழிந்த காலத்தே பிங்கலந்தை செய்யப்பட்டதுபோலும் என்று நினைக்க இடமுண்டாகிறது. இன்னும் சிலகாரணத்தாலும், இந்நிகண்டின் காலம் இன்றைக்கு 735 வருடங்கட்கு முந்தியதென்று தமிழறிஞர் ஆராய்ச்சியால் தெளியப்பட்ட நன்னூலுக்கு முற்பட்டதென்பது, 'பிங்கலம் முதலா நல்லோருரிச்சொல்" என்பதனால் விளக்கமாம்.

3 சூடாமணி—இந்நிக்ண்டின் ஆசிரியர் "வீரைமண்டல புருடர்" "மின்னூம் பிண்டிநிழல் வீற்றிருந்தவனை வாழ்த்தி" எனத்தமது நிகண்டில் கடவுள் வாழ்த்துக்கூறுவதால் இவர் ஜைனராவர். இவர் ஊர் "வீரை என்னும் பேருமாண்டூர்" இவர் ஆசிரியர், திருநறுங்குன்றை "குணபத்திரர்" மண்டலபுருடர் கி பி. 1509—1529-ம் வருடங்களுக்கிடையே விஜயநகரத்திருந்தரசு புரிந்த கிருஷ்ணராயன் காலத்தவரென்பது கேடிமன்னர் வணங்குந்தாளான் கிருஷணராயன்போல்" என்பதால் விளங்கும், திவாகரம், பிங்கலந்தை நிகண்டுகள் இரண்டிற்கும் பிற்பட்டது சூடாமணியென்பது. இதன் பாயிரத்து இரண்டாஞ்செய்யுளாகிய

" அங்கது போயபின்றை யலகிநூல் பிறந்தழற்றுஞ்
செங்கதிர் வரத்திற்றேன்றுந் திவாகரர் சிறப்பின்மிக்க
பிங்கலருரைநாற்பாவின் பேணினர் செய்தார் சேர
விங்கையிரண்டுங்கற்க வெளிதல வென்று சூழ்ந்து"

என்பனவற்றுற் காண்க.

" மண்டலபுருடரின் ஆசிரியராகிய குணபத்திராசாரியர் சகாப்தம் 820 (கி பி. 898) ல் வனவாஸி என்னும் நாட்டில் வங்காபுரத்தில் அரசுபுரிந்த இரட்டவரசனுகிய அகாலபுருஷன் காலத்தவரென்றும், நிகண்டில் உபகாரஸ்மிருதியாக கூறப்படுகிற கிருஷ்ணராயர் ராஷ்டிரகூடநாட்டு அகாலவருஷ கிருஷ்ணராஜனே யொழிய விஜயநகரத்து கிருஷ்ணராயன் அல்லவென்றும். இந்நிகண்டின் காலம் கி. பி. 808-க்கு மேற்பட்டு கி. பி. 925-க்கு இடையினுள்ள காலமென்றும் தஞ்சை ஸ்ரீமான் T. S. குப்புசாமிசாஸ்திரிகள் தஞ்சைத்தமிழகப்பத்திரிகையில் கூறுகின்றனர்.

இதே விஷயத்தைச் செந்தமிழ் மாஜிப்பத்திராசிரியர் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள் செந்தமிழ் 5 தொகுதிப்பத்திரிகையில் " குணபத்திராசாரியரென்பவர் 500 வருடங்கட்குமுன்பு விஜய நகரத்தில் அரசுபுரிந்த விஷ்ணுதேவராயர் என்று மறுநாமம் பூண்ட கிருஷ்ணதேவராயர் காலத்தில் ஜைனமார்க்கத்தில் நடந்த சில மாறுபாடுகளை நீக்கிச் சீர்படுத்தற்பொருட்டு பண்டிதர்களை நியமித்தபோது அவ்வித்வகோஷ்டியில் குணபத்திராசாரியரும் ஒருவராயிருக்கலாமென்றும், இவ்விஷயம் தமக்குச் சென்னை ராஜாங்கத்துக்கையெழுத்துப் புத்தகசாலையில் (Government oriental manuscript Library) யதிதர்மம், ஸ்ராவகதர்மம் என்னும் கிரந்தத்தில், " பண்டிதர்வயணம் " என்பதன்கீழ் கண்டதென்றும் இவர் காலம் 15 நூற்றாண்டென்றும் சொல்லுகின்றனர். மேற்கூறிய பண்டிதர்களிருவர் கருத்தையும் நாம் முற்றும் கவனித்தால் முன்னவர் விஷயத்தில் கால மாறுபட்டால் முரணுகவும், பின்னவர் கருத்து கால விஷயத்தில் ஒத்துப்பொருத்தமுடையதாகக் காணப்படுவதாலும் பின்னவர் கருத்தைப் பின்பற்றியே இந்நிகண்டின் காலம் 500 வருடங்கட்கு முற்பட்டதென்று கொள்வோமாக.

4. உரிச்சொல்—இந்நிகண்டின் ஆசிரியர் " காங்கேயர் " என்ப. இவர் ஆசிரியர் இன்னரென்பதும் பிறவிசேடங்களொன்றும் அறிதல் கூடவில்லையென்று முன்னமே கூறினேம் இவர் பெயரால் இவர் கங்கா வம்சத்தராயிருக்கலாமென்று தோன்றுகிறது. " இம்முடி " என்னும் பட்டம் இவர்க்கு கூறப்படுகிறது.

இப்பட்டம் கொங்குநாட்டு வேளாள வகுப்பாராகிய கவுண்டரில் ஒரு பிரிவினர்க்குரிய குடிப்பெயராக இன்றும் வழங்கப்பட்டு வருகின்றன. "கொங்குமண்டலசதகத்தில்"

"அலைகடல் சூழுமவனியிற் செந்தமி ழாய்பவர்கள்
நலனுறத் தக்கவகையாக வுள்ள நனிமகிழ்ந்தே
இலகுமுரிச்சொ னிகண்டு வெண்பாவி லிசைத்தகலை
வலவெழிற் காங்கயன் வாழுமோரூர் கொங்குமண்டலமே"
(74)

எனவருனவற்றால் இவர் ஜனனஸ்தலம் கொங்குநாட்டிலுள்ள "மோரூர்" எனத்தெரிகிறது. இம்மோரூர் சேலம்ஜில்லா சங்ககிரிதுர்க்கம் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிறது. இம்மோரூரைப்பற்றி படிக்காசுப்புலவர் பாடிய "பாம்பலங்கார வருக்கக்கோவையில்" ஆசிரியவரலாற்றில்

"நான் மறைப்பண் கேட்டுருகு நல்லான் மடிவழியும்
பான்மடை யீதைய பலகலைதேர்—வான்புலவர்
மாருகத் தாற்கடைய வாய்க்கா லெனப்பெருகு
மோரூரா மென்றூர் முனம்."

என அழகான பாடலொன்றும் காணப்படுகிறது.

உதய தாரகைப்பத்திராதிபரும், யாழ்ப்பாணவித்துவானுமாகிய ஸ்ரீமத், அ. சதாசிவம்பிள்ளையவர்கள் தமது பாவலர் சரித்திர தீபகத்திலும், காஞ்சீபுரம் முத்தமிழ்சூரி வீரபத்திரதேசிகர்,

"மடம்பெறு மாந்தர் மாடா மண்டல மாண்புருட
னிடம்பெற வோங்குமுரிச்சொ னிகண்டை யினிதுரைத்துக்
குடம்பெறு மாமுனி யொப்பத் தமிழைக் குவலயத்திற்
றிடம்பெறவைத்த திறலோர் செங்குந்த சிலாக்கியரே"

எனத்தமது செங்குந்த சிலாக்கியர் மாலையிலும் இந்நிகண்டாசிரியரைச் செங்குந்தமரபினரென்றே குறிக்கின்றனர். மரபைப்பற்றி நமக்கு வாதமில்லை, எம்மரபாயினுமாகுக. இவர் பிறப்பிடமட்டும் தொண்டைமண்டலமென்றும், கொங்குமண்டலமென்றும் உறுதிபெறக்கூறுவதற்கின்றி ஐயுறுவதற்காயின. நமது பூர்வகாலத்தமிழறிஞர் முன்னோர் வாழ்க்கைநிலையைப்பற்றி உண்மைசம்பவக் குறிப்புநிலை விசேடங்களை காலக்கணக்கோடு குறித்து வைக்காத் தோஷத்தால் இவ்விடர் விளைவதற்காயினவெனலாம், ஆனால், பெரும்பாலும் கொங்குமண்டலத்திலுள்ள வேளாண்மரபினருக்

கும், மோரூரிலுள்ள கவுண்ட வகுப்பினர்க்கும்; " குமாரசாமிக்காங்கேயன், இம்முடிக்காங்கேயன், ஆறுபத்துக்காங்கேயன், நல்லதம்பிக்காங்கேயன்" என்ற பெயர்கள் வழக்கத்திலிருந்து வருவதால் "காங்கேயர்" என்னும் பெயர் இக்கொங்குமண்டலத்தார்க்கே உரியதாகக்கொள்ளலாமெனத்தோன்றுகிறது. பாவலர் சரித்திர தீபக ஆசிரியர் கடல்கடந்த அன்னிய நாட்டினராதலால் இந்நாட்டினரது பழக்க வழக்கங்கள் அறிந்துக்கொள்ளக்கூடாதது பற்றிக் கர்ணபரம்பரையில் கேட்டவாறு இப்புலவரைத்தொண்டைநாட்டினரென்று குறித்திருக்கலாமென்று நினைக்கிறோம். இது உண்மையும் பொருத்தமுமாம் என்று கொள்ளின், இந்நிகண்டாசிரியர் கொங்குமண்டலத்துப்புலவரென்பதற்கையமின்று. இனிய வெண்பாவாற் பாடப்பட்ட " இவ்வுரிச்சோல்" 1840 வருஷம் புதுச்சேரியில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

"உரிச்சோல் இருநூறு முதவு" என்று விநாயகர் காப்புச்செய்யுளில் சொல்லப்பட்டிருப்பினும் அப்போது பதிப்பிக்கப்பட்ட புத்தகத்தில் (220) செய்யுளும், 1858 ௵ யாழ்ப்பாணம் மானிப்பாய் அச்சுயந்திரசாலையில் பதிப்பித்த பிரதியில் (330-ம்) விகிருதி ௵ ஆவணி மாதம் சென்னை ஆதிகலாநிதி அச்சக்கூடத்தில் வித்வான் ஸ்ரீமத், சிவன்பிள்ளையவர்கள் பதிப்பித்த பிரதியில் 286-ம் மற்றோர் பிரதியில் 288 செய்யுள்களும் காணுவது கொண்டு காலாந்திரத்தில் அவை பிறராற் பாடப்பட்டு சேர்த்தனபோலும். இவ்வளவே இப்புலவர் வரலாற்றைப்பற்றி நாமறிந்தவை. சுபம்.

சி. கு. நாராயணசாமி முதலியார்

THE PENTLAND COFFEE & TEA WORKS,

132, Big bazaar street,

Coimbatore.

Whole sale dealers in best quality of coffee seeds and coffee powder, coffee tins. Tea of all kinds Congou, Orange Pekoe, Gunpowder, Dust. Fannings etc., Pure Nilgiri Eucalyptus oil and Imitation Iron Trunks, Imitation steel trunks office box, cash box, school box, hat box etc., samples & price, list will be sent on application.

எங்களுடைய கம்பெனியில் முதல்தரமான காப்பிக்கொட்டைகள், காப்பிதூள்கள், $\frac{1}{4}$ பவுண்டு, $\frac{1}{2}$ பவுண்டு 1 பவுண்டு டின்களாய் சில்லரையாயும் மொத்தமாயும் விற்பனைக்குத்தயாராயிருக்கிறது. ஆரஞ்சு பெகோ, காங்கோ, கன்பவுடர், டஸ்ட், பெனிங் முதலிய பலவகையான உயர்தர தேயிலைகளும் சில்லறையாயும் மொத்தமாயும் கிடைக்கும், தவிர ஸ்டீல் தகடுகளினால் செய்யப்பட்ட டிரங்கு பெட்டிகளும், ஆபீஸ்பாக்சுகள், கியாஷ் பெட்டிகள் ஸ்கூல்பெட்டிகள் முதலியவைகள் வியாபாரத்திற்கும் சில்லறையாயும் விற்கப்படும். முதல்தரமான நீலகிரி புளுகம ஆயில் (Eucalyptus Oil) அவுன்ஸ் பாட்டில்களாயும், முழுபுட்டிகளாயும் குறைந்த விலைக்கு கிடைக்ரும்.

மொத்தமாய் வாங்கும் வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும் சாம்பில்களும் விலை விபரமும் தெரிய விரும்புவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதினால் இனாமாக அனுப்பப்படும்.

பெண்ட்லண்டு காபி அண்டு டீ ஒர்க்ஷ்,

132, பெரிய கடைவீதி

கோயமுத்தூர்.